# பஞ்சாப் நேஷனல் வங்கி
# punjab national bank

கடன் மீட்பு நிர்வாகக் கிளை (ARMB) (D.No.437100) : எண்.448A, டாக்டர் நஞ்சப்பா ரோடு,
கோயம்புத்தூர் - 641 018. போன் : 0422 2231314, 0422-2231345, 9963993409. மின்னஞ்சல் : cs4371@pnb.bank.in

## அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

## அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான மின் ஏலத்திற்கான பொது அறிவிப்பு : 02.09.2026 தேதி அன்று (காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை)

**முன்வைப்புத் தொகை மற்றும் ஆவணங்கள் சமர்ப்பிக்க கடைசித் தேதி மற்றும் நேரம் : 02.09.2026 தேதி அன்று, மாலை 3.00 மணி வரை**

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 9(1) உடன் கீழ், அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான மின்–ஏல விற்பனை அறிவிப்பு.

பஞ்சாப் நேஷனல் வங்கியின் (பாதுகாக்கப்பட்ட கடனீந்தவர்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், மேற்படி வங்கிக்கு வரவேண்டிய கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொகையை, கீழே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாதமளித்தவர்(கள்) ஆகியோரிடமிருந்து வசூலிக்கும் பொருட்டு, கடன் வழங்கிய வங்கிக்குப் பிணையப்படுத்தப்பட்ட/ஈடுவைக்கப்பட்ட ஆக்கபூர்வ / கொள்நிலை / அடையாள சுவாதீனம் செய்து கொண்ட கீழ்க்கண்ட அசையாச் சொத்தினை கீழே அட்டவணையில் குறிப்பிட்டுள்ள தேதியில் விற்பனை செய்யவுள்ளார் என்பதை குறிப்பாக கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாதமளித்தவர்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரியப்படுத்தப்படுகிறது. இந்த சொத்துக்கள் 'எங்கு உள்ளதோ உள்ளபடி', 'என்ன உள்ளதோ உள்ளபடி', 'எப்படியுள்ளதோ உள்ள நிலையில்' விற்கப்படும். சொத்திற்கான குறைந்தபட்ச நிர்ணயிக்கப்பட்ட விலை மற்றும் முன் வைப்புத் தொகை கீழே பட்டியலில் உள்ள விபரப்படியாகும்.

பாதுகாக்கப்பட்ட கடன் வழங்கிய வங்கிக்குத் தெரியவந்த ஏதேனும் வில்லங்கங்கள் குறித்த விபரம் : தெரியவில்லை.

### பாதுகாக்கப்பட்ட சொத்துக்களின் அட்டவணை

| லாட் எண் | கிளையின் பெயர் மற்றும் கணக்கின் பெயர் மற்றும் கடன்தாரர்/ உத்தரவாதமளித்தவர் பெயர் மற்றும் விலாசம் | பிணையப்பட்ட அசையாச் சொத்து விபரம் / உரிமையாளரின் பெயர் (சொத்தின் அடமானதாரர்/கள்) | அ) 2002 சர்பாசி சட்டத்தின் பிரிவு 13(2)ன் படியான கேட்பு அறிவிப்பு தேதி<br>ஆ) நிலுவைத் தொகை<br>இ) 2002 சர்பாசி சட்டத்தின் பிரிவு 13(4)ன் படியான சுவாதீனம் எடுத்த தேதி<br>ஈ) சுவாதீனத்தின் தன்மை அடையாளம் / கொள்நிலை/ஆக்கபூர்வ சுவாதீனம் | 1) ரிசர்வ் விலை<br>2)முன்வைப்புத் தொகை (EMD)<br>3) ஏல மடங்குத் தொகை |
|---|---|---|---|---|
| 1. | **BO : சேலம் செவ்வாய்ப்பேட்டை (ID : 071410) (தற்போது கோயம்புத்தூர் ARMBக்கு மாற்றப்பட்டுள்ளது)**<br>**M/s. மகாலட்சுமி யார்ன்ஸ்,**<br>**கடன்தாரர் :**<br>**M/s. மகாலட்சுமி யார்ன்ஸ்,**<br>எண்.53, எல்லப்பன் வீதி, அம்மாபேட்டை, சேலம் – 636 006.<br>**உரிமையாளர் :**<br>**திரு.A.V.S.சபரிநாதன்**<br>எண்.53, எல்லப்பன் வீதி, அம்மாபேட்டை, சேலம் – 636 006.<br>**அடமானதாரர் :**<br>**திரு. V.செல்வம்,**<br>கதவு எண்.55/26, சுந்தர கணபதி வீதி, அம்மாபேட்டை, சேலம் – 636 006. | **(அட்டவணைச் சொத்து) :**<br>**லாட் 1 : திரு.V.செல்வம் பெயரிலுள்ள சொத்துக்கள் : (PAN NO AUXPS4567P) :**<br>**இனம் எண்.1 : (ஆவண எண்.1939/1994ன்படி) :** சேலம் மாவட்டம், சேலம் இணை 1 கிழக்கு சார் பதிவு மாவட்டம், சேலம் தாலூகா, தாதம்பட்டி கிராமத்தில் மிட்டா சர்வே எண்.172/1, மறுதீர்வை சர்வே எண்.185/2ல் உள்ள புன்செய் ஏக்கர் 1.40ல் அடங்கியதும் அதன் பகுதியுமான நிலம் மற்றும் கட்டிடச் சொத்து, 1452½ சதுர அடி விஸ்தீரணத்தில் குறிப்பிட்ட எல்லைகளுக்குள் உள்ளது. **எல்லைகள் :** ராஜியின் நிலத்துக்கு மேற்கு, மாரியப்பகவுண்டர் நிலத்துக்கு வடக்கு, பழனியப்ப முதலியார் மற்றும் சாந்தாயம்மாள் நிலத்துக்குக் கிழக்கு, கிழமேல் வண்டித்தடத்துக்குத் தெற்கு. இதன் **நிலத்தின் நேரிட்ட அளவுகள் :** கிழமேல் வடபுறம் 20 அடி, கிழமேல் தென்புறம் 20 அடி, தென்வடல் கிழபுறம் 72.9 அடி, தென்வடல் மேல்புறம் 72.6 அடி ஆக உள்ள 1452½ சதுர அடி நிலம். நகர்ப்புற நிலவரித் திட்டப்பதிவேட்டின்படி இந்நிலம் புதிய டவுன் சர்வே எண்.35ல், AK வார்டு, பிளாக் எண்.27ல் அப்பதிவேட்டின்படி மொத்தமுள்ள புன்செய் எக்டர் 0.1.41.5 நிலத்தினுள் அனைத்து பயன்பாட்டுரிமைகள் மாமூல் தட நடை பாத்தியம் முதலியன சேர்ந்த சொத்து.<br>**அட்சரேகை : 11.665528 N, தீர்க்கரேகை : 78.187893E** | **அ)** 04.03.2024<br>**ஆ) 31.07.2026 தேதி அன்று ரூ.1,34,79,179.89** (ரூபாய் ஒரு கோடியே முப்பத்து நான்கு லட்சத்து எழுபத்து ஒன்பதாயிரத்து நூற்று எழுபத்து ஒன்பது மற்றும் பைசா எண்பத்து ஒன்பது மட்டும்) மற்றும் **01.08.2026** தேதியிலிருந்து பின்வட்டி மற்றும் பிற செலவுகள் **(கணக்கு எண். 07144011000925).**<br>**இ)** 13.06.2024<br>**ஈ)** அடையாளம் | **லாட் 1 :**<br>**1) ரூ.36,50,000/–** (ரூபாய் முப்பத்து ஆறு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)<br>**2) ரூ.3,65,000/–** (ரூபாய் மூன்று லட்சத்து அறுபத்து ஐந்தாயிரம் மட்டும்)<br>**3) ரூ.25,000/–** (ரூபாய் இருபத்து ஐந்தாயிரம் மட்டும்)<br>**மின் ஏலத் தேதி மற்றும் நேரம் : 02.09.2026 (புதன்கிழமை) காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை** |
| 2 | **லாட் 2 : திரு.V.செல்வம் பெயரிலுள்ள சொத்துக்கள் : (PAN NO AUXPS4567P) :**<br>**இனம் எண்.2 : (ஆவண எண்.3119/1986ன்படி) :** சேலம் மாவட்டம், சேலம் கிழக்கு சார் பதிவு மாவட்டம், சேலம் தாலூகா, தாதம்பட்டி கிராமத்தில் மறுசர்வே எண்.185/1ல் அடங்கிய புன்செய் ஏக்கர் 3.00ல் **முதல் தாக்கு : 2606 சதுர அடி விஸ்தீரண நிலத்தின் எல்லைகள் :** பாலசுப்ரமணியத்தின் அதிகார முகவர் விற்பனை செய்த நிலத்துக்கு மேற்கு, இரண்டாம் தாக்கு வழித்தட நிலம் மற்றும் கிருஷ்ணமூர்த்தி நிலத்துக்கு வடக்கு, பாலசுப்ரமணியம் வகையறாவுக்குச் சொந்தமான நிலத்துக்குக் கிழக்கு, பாலசுப்ரமணியம் வகையறாவுக்குச் சொந்தமான நிலத்துக்குத் தெற்கு. **நிலத்தின் நேரிட்ட அளவுகள் :** கிழமேல் வடபுறம் 68 அடி, கிழமேல் தென்புறம் 71 அடி, தென்வடல் கிழபுறம் 39 அடி, தென்வடல் மேல்புறம் 36 அடி ஆக உள்ள 2606 சதுர அடி நிலம், புதிய டவுன் சர்வே எண்.31/2, வார்டு AK, பிளாக் எண்.27ல் அடங்கிய 0.2.48.0 எக்டர் மற்றும் டவுன் சர்வே எண்.30/2, வார்டு AK, பிளாக் எண்.25ல் அடங்கிய 0.0.40.5 எக்டர் ஆகியவற்றினுட்பட்டதாகும்.<br>**இரண்டாம் தாக்கு : (விற்பனை ஆவணப்படி தடவழி உபயோகத்துக்கென உள்ள 1678 சதுர அடி விஸ்தீரண நிலம்) :** பாலசுப்ரமணியம் விற்பனை செய்த நிலத்துக்கு மேற்கு, V.தர்மலிங்கத்துக்கு விற்பனை செய்த நிலத்துக்கு வடக்கு, கிருஷ்ணமூர்த்தி மற்றும் வகையறாவுக்கு விற்பனை செய்த நிலத்துக்குக் கிழக்கு, முதல் தாக்கு நிலத்துக்குத் தெற்கு. **நிலத்தின் நேரிட்ட அளவுகளாக :** கிழமேல் வடபுறம் 8 அடி, கிழமேல் தென்புறம் 7½ அடி, தென்வடல் கிழபுறம் 216½ அடி, தென்வடல் மேல்புறம் 216½ அடி ஆக உள்ள 1678 சதுர அடி நிலம் தடவழி உபயோகத்துக்கெனவிடப்பட்டது. டவுன் சர்வே எண்.34/8ல் வார்டு AK, பிளாக் எண்.27ல் 0.1.8.0 எக்டர் விஸ்தீரணத்தில் உள்ளது. மேலே விவரிக்கப்பட்டுள்ள சொத்து, கொய்யாத்தோப்பு வீதியில் சேலம் மாநகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ளது.<br>**அட்சரேகை : 11.665500N, தீர்க்கரேகை : 78.187861E** | | | **லாட் 2 :**<br>**1) ரூ.82,00,000/–** (ரூபாய் எண்பத்து இரண்டு லட்சம் மட்டும்)<br>**2) ரூ.8,20,000/–** (ரூபாய் எட்டு லட்சத்து இருபதாயிரம் மட்டும்)<br>**3) ரூ.50,000/–** (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்)<br>**மின் ஏலத் தேதி மற்றும் நேரம் : 02.09.2026 (புதன்கிழமை) காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை** |

### மின்–ஏலத்திற்கான நிபந்தனை விபரங்கள்

இவ்விற்பனையானது பிணைய நலன் (அமலாக்க) விதிகள் 2002ல் சொல்லப்பட்ட விதிகள் மற்றும் நிபந்தனைகளுடன் கீழ்க் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கும் உட்பட்டது.

1. சொத்துக்கள் 'எங்குள்ளதோ அங்கு', 'என்ன உள்ளதோ அது' மற்றும் 'உள்ளதுள்ளவாறே' என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.
2. அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பிணையச் சொத்தின் விவரங்கள் அங்கீகரிக்கப்பட்ட அலுவலர் நன்கு அறிந்த வகையில் சரியானது, எனினும் அதில் காணப்படும் எந்த ஒரு தவறு, விடுதல் மற்றும் திருத்தத்துக்குப் பொறுப்பாக மாட்டார்.
3. விற்பனையானது கீழே ஒப்பமிட்டுள்ள அலுவலரால் https://baanknet.com இணையதளத்தில் உள்ள மின் ஏல மேடையில் **02.09.2026 (புதன்கிழமை); காலை 11.00 மணியிலிருந்து மாலை 4.00 மணி வரை** நடத்தப்பெறும்.
4. விற்பனை தொடர்பான மேலும் விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கீழ்க் குறிப்பிட்டுள்ள இணைய தளங்களைக் காணவும்.

**https://baanknet.com & www.pnbindia.in**

**தேதி : 10.08.2026**
**இடம் : கோயம்புத்தூர்**

**அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி**
**பாதுகாக்கப்பட்ட கடன் வழங்கியவர்**
**பஞ்சாப் நேஷனல் வங்கி**

**சர்பாசிச்சட்டம் 2002ன் கீழ் விதி 9(1)–ன் படியான சட்டப்பூர்வ விற்பனை அறிவிப்பு**

26x16w

**'Dinamani'**
**Salem & Namakkal Edition**
**14-08-2026 - Friday**